**கொவிட்-19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலைக்கான மேலதிக நிதியளிப்பு செயற்திட்டம் - 2020**

கொவிட்-19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலைக்கான மேலதிக நிதியளிப்பு செயற்திட்டத்தின் 2020 யூலை 23 தொடக்கம் திசெம்பர் 31 வரையான முதலாது கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2020 யூலை 23 ஆம் திகதிய 6727 எல்கே மற்றும் 6728 எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் v ஆம் உறுப்புரையின் 5.01 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்ட நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் மகளிர் மற்றும் சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய சமூர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் அமுல்ப்படுத்தல் முகவராகவும் உள்ளது. தொற்றுநோய்களின் போது காத்திருப்புப் பட்டியலில் விண்ணப்பதாரர்களைச் சேர்ப்பதன் மூலமும், தற்போதுள்ள காசு பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் தொற்றுநோய்களின் போது அதிகரித்த தொகையை வழங்குவதன் மூலமும், மாற்றுத்திறனாளிகள் மற்றும் நாட்பட்ட நோயால் பாதிக்கப்பட்ட முதியோர்களுக்கு தற்போதுள்ள காசு பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் காசுப் பரிமாற்றங்களை அதிகரிப்பதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 16,248.45 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 87.24 மில்லியனானதுடன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2020 யூலை 23 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 02 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றையும் அதன் காசுப்பாய்ச்சல்களையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 70 மற்றும் 100 வயதுக்கு மேற்பட்ட சிறுநீரக நோயாளிகள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் கொண்ட முதியோர்களுக்கு வழங்கப்பட்ட படிகளை மீள்நிரப்புச் செய்வதற்காக மாவட்ட செயலகத்திற்கு ரூபா 5,602 மில்லியன் தொகையான கடன் நிதிகள் வழங்கப்பட்டிருந்தது. மாவட்டச் செயலகத்தால் பேணப்படும் புத்தகங்களின் பிரகாரம் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தினால் வழங்கப்பட்ட கடன் பெறுகைகளின் பெறுவனவு மற்றும் மீளப்பெறல் ஆகியன treasure நிதியிலிருந்து தனித்தனியாக இனங்காணப்பட முடியதிருந்தன. | செயற்திட்டத்தின் கூறு 1.2 இன் கீழ் காசு பரிமாற்றம் பெற்ற தகுதியான பயனாளிகளின் ஏடுகளை இராஜாங்க அமைச்சு பேணுகிறது. ஒட்டுமொத்த நிதிக்கூற்றுக்கள் சுகாதார அமைச்சிலுள்ள செயற்திட்ட அலுவலகத்தால் தயாரிக்கப்படுகின்றன. | செயற்திட்டம் ஏனைய படிகளிலிருந்து செயற்திட்டச் செலவினங்களைத் தனித்தனியாகப் பதிவுசெய்ய வேண்டியதுடன் செயற்திட்டச் செலவினங்களைத் தனித்தனியாகப் பதிவுசெய்து செயற்திட்ட அலுவலகத்திற்கு மாதாந்தம் அறிக்கையிடுமாறு அனைத்து மாவட்டச் செயலகங்களுக்கும் அறிவிக்க வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,602 மில்லியன் தொகை மீள்நிரப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஏடுகளின் பிரகாரம் தொடர்புடைய மீளப்பெறல் பெறுமதி ரூபா 5,341.48 மில்லியனாக காணப்பட்டது. எனினும் ரூபா 250.90 மில்லியன் வேறுபாட்டிற்கான காரணங்கள் கணக்காய்வுக்கு விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை. | மீளப்பெறுதல்களில் குறிப்பிடப்பட்ட தொகைக்கும் மீள்நிரப்புச் செய்யப்பட்ட தொகைக்கும் இடையேயான வேறுபாடு செயற்திட்டத்தின் கணக்கு பேணப்படுகின்ற திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திடமிருந்து சரிபார்க்கப்பட வேண்டும். | வேறுபாட்டை கணக்கிணக்கம் செய்து தொடர்புடைய பேரேட்டுக் கணக்குகளில் பொருத்தமான சீராக்கங்களை மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் வழங்கும் முகவரால் அறவிடப்பட்ட ரூபா 19.5 மில்லியன் தொகையான முன் இறுதிக் கட்டணம் (front end fee) நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | முன் இறுதிக் கட்டணம் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | நிதி உடன்படிக்கையின் 2 ஆம் பட்டியலின் (ஈ) பந்தி | செயற்திட்ட ஒருங்கிணைப்பு பிரிவு அமைச்சினுள் நிறுவப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. | இந்த இராஜாங்க அமைச்சின் பொறுப்பானது, உலக வங்கி மூலம் உலக வங்கிக்கு உரித்துள்ள செலவினங்களுக்கான மீளப்பெறல் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதாகும். | அமைச்சுக்குப் பொறுப்பான செயற்திட்ட ஒருங்கிணைப்புப் பிரிவை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | செயற்திட்ட பத்திர இல. பிஏடி 4021 | | | |
| | (அ) 45 ஆம் பந்தி | செயற்திட்ட பத்திரத்தின் பிரகாரம் செயற்திட்டத்தின் கீழ் நிதி முகாமைத்துவ நடவடிக்கைகளை முகாமை செய்வதற்கு போதுமான தகைமை மற்றும் அனுபவத்துடன் போதுமான பதவியணியினரை செயற்திட்டம் நியமித்திருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | செயற்திட்டத்தின் கீழ் நிதி முகாமைத்துவ நடவடிக்கைகளை முகாமை செய்வதற்கு போதுமான தகுதி மற்றும் அனுபவத்துடன் போதுமான பதவியணியினர் செயற்திட்டத்திற்கு நியமிக்கப்பட வேண்டும். |
| | (ஆ) 51 ஆம் பந்தி | மாவட்டச் செயலகங்களிலிருந்து அனைத்துப் பிரிவினருக்கும் செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளை உள்ளடக்கிய மாதாந்த செலவின அறிக்கைகளை இச் செயற்திட்டம் சேகரித்து பதிவு செய்திருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | மாவட்டச் செயலகங்களிலிருந்து அனைத்துப் பிரிவினருக்கும் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை உள்ளடக்கிய மாதாந்த செலவின அறிக்கைகள் செயற்திட்டத்தால் சேகரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 1994 ஏப்ரல் 20 ஆம் திகதிய 30/94 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை | | | |
| | (அ) 5.6.2 ஆம் பந்தி | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் தனித்தனியான கட்டுநிதி மற்றும் வங்கிக் கணக்கில் செயற்பட வேண்டும். எனினும், செயற்திட்டமானது தனித்தனியான கட்டுநிதி மற்றும் வங்கிக் கணக்கை பேணியிருக்கவில்லை. | இராஜாங்க அமைச்சு கொவிட் - 19 தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட தகுதியுள்ள நபர்களுக்கு திறைசேரியால் வழங்கப்படும் ஒதுக்கீடுகளில் இருந்து ரூபா 5,000 கொடுப்பனவை மேற்கொண்டிருந்தது. | செயற்திட்டமானது தனித்தனியான கட்டுநிதி மற்றும் வங்கிக் கணக்கில் செயற்பட வேண்டும். |
| | (ஆ) 5.6.6 ஆம் பந்தி | சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து உரிமைகோரல்களும் சான்றுறுதிப்படுத்தப்பட்ட செலவின கூற்றுக்களால் நிறைவேற்றப்படுகின்றன. ஆனால், அதற்கான சான்றாதாரங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தகுதியான பயனாளிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவின் அடிப்படையில் மாதாந்த செலவின விபரங்கள் தயாரிக்கப்பட்டு அவை மீளப்பெறலிற்கான விண்ணப்பங்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்டன. | அனைத்து உரிமைக்கோரல்களும் சான்றுறுதிப்படுத்தப்பட்ட செலவின கூற்றுக்கள் மூலம் நிறைவேற்றப்பட வேண்டும். |
| | (இ) 5.6.11 ஆம் பந்தி | சுற்றறிக்கையின் பிரகாரம் கோரப்பட்ட மற்றும் பெறப்பட்ட மீள்நிரப்பல்கள் கணக்கிணக்கம் செய்யப்பட வேண்டியதுடன் ஏதேனும் வேறுபாடுகள் நன்கொடையாளரிடம் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். எனினும், செயற்திட்டம் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | மீளப்பெறலில் குறிப்பிடப்பட்ட தொகைக்கும் மீள்நிரப்பு செய்யப்பட்ட தொகைக்கும் இடையே உள்ள வேறுபாடானது செயற்திட்டக் கணக்கு பேணப்படும் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திடமிருந்து சரிபார்க்கப்பட வேண்டும். | கோரப்பட்ட மற்றும் பெறப்பட்ட மீளப்பெறல்கள் கணக்கிணக்கம் செய்யப்பட வேண்டியதுடன் ஏதேனும் வேறுபாடு இருந்தால் நன்கொடையாளரிடம் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | (ஈ) 5.10 ஆம் பந்தி | செயற்திட்டம் சுற்றறிக்கை அறிவுறுத்தலுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை அட்டுறு அடிப்படையிலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய கணக்கீட்டு கொள்கைகளின் அடிப்படையிலும் பேணியிருக்கவில்லை. | சுகாதார அமைச்சில் உள்ள செயற்திட்ட அலுவலகத்தால் அமுல்ப்படுத்தப்படும் தாய் (parent) செயற்திட்டத்திற்காக தனியான கணக்காய்வு அறிக்கையொன்று தயாரிக்கப்படுகிறது. | ஏற்றுக்கொள்ளக்கூடிய கணக்கீட்டு கொள்கைகளின் பிரகாரம் பேணப்படும் செயற்திட்டத்தின் கணக்கீட்டு ஏடுகளின் அடிப்படையில் வருடாந்த கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (iv) | 2020 பெப்ரவரி மாத ஏஜீஎஸ்/எஸ்எவ்எஸ்/2021/65 ஆம் இலக்க கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுற்றறிக்கை | செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2021 பெப்ரவரி 28 இல் அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 ஆகஸ்ட் 16 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்கள் உரிய திகதிகளில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 3. நிதிச் செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் நிதி செயன்முன்னேற்றம்

கொவிட் தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வசதிகளை வழங்குவதற்காக, 70 மற்றும் 100 வயதுக்கு மேற்பட்ட நோயாளிகள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் கொண்ட முதியோர்களுக்கு அரசாங்கம் படிகளை வழங்கியிருந்தது. பின்னர் மேற்படி படிகளுக்கு நிதியளிப்பதற்காக அரசாங்கம் சர்வதேச அபிவிருத்தி சங்கத்துடன் கடன் உடன்படிக்கையை கைச்சாத்திட்டிருந்தது. கடன் வழங்கும் முகவரால் வழங்கப்பட்ட ரூபா 16,248.45 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 87.24 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 34.47 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 5,602 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 29 மில்லியன் தொகை மாத்திரமே 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந் நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.